பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 28 செவ்வாய்க்கிழமை (14-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 343

# இருபாலை, கோண்டாவிலில் நேற்று உக்கிரச் சண்டை!

## 7 போராளிகள் நேற்று வீரச்சாவு

யாழ்ப்பாணம், நவ. 17

கோண்டாவில், இருபாலை பகுதிகளில் நேற்று அரசபடைகளுடன் இடம்பெற்ற உக்கிரச் சண்டையில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஏழு பேர் வீரச்சாவடைந்தனர்.

(உ-3)

## படைக்கு பேரிழப்பு டாங்கி எரிகின்றது

யாழ்ப்பாணம், நவம்பர் 14

நேற்றுக் காலை கோண்டாவில் சந்தியிலும் இருபாலைச் சந்தியிலும் ஸ்ரீலங்காப் படையினரை வழிமறித்து புலிகள் உக்கிரச் சமர் புரிந்தனர்.

நேற்று மாலை வரை தொடர்ந்த இச்சண்டையில் படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் படையினரின் டாங்கி ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி எரிவதாகவும் யுத்த முனைச் செய்திகள் தெரிவித்தன.

கோண்டாவில் டிப்போ பகுதியிலிருந்து முன்னேறிய படையினரை கோண்டாவில் சந்தியில் வைத்தும்—

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து முன்னேறிய படையினரை இருபாலைச் சந்தியில் வைத்தும்—

நேற்றுக் காலை 6-30 மணிக்கு வழிமறித்து விடுதலைப் புலிகள் கடும் சமர் புரிந்தனர்.

நேற்று மாலைவரை இச்சண்டை நீடித்தது

அகோர ஷெல் தாக்குதல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைசங்கசர்வதேச குழுவின் யாழ்.பணிமனை இன்றுடன் மூடப்படும்

### காலை 8 மணிக்கு பிரதிநிதிகள் வெளியேறுவர்

யாழ்ப்பாணம், நவ. 14

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் இன்று காலை 8 மணியுடன் மூடப்படும் என்றும்—

அதற்குப் பதிலாக பருத்தித்துறையிலிருந்து அந்த அமைப்பு அலுவலகம் இயங்கும் என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

இந்த அமைப்பின் யாழ். அலுவலகப் பகுதியில் இருந்த பொருள்கள் கடந்த சில நாட்களாகவாகனங்களில் ஏற்றப்பட்டு, பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்துக்கு அருகே திறக்கப்பட்டுள்ள புதிய அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டன.

யாழ். நகரில் தற்போது தங்கியுள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஓரிரு பிரதிநிதிகளும் இன்று காலையுடன் அங்கிருந்து வெளியேறி விடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3-9)

## யாழ். போதனா வைத்தியசாலை இன்று முதல் மந்திகையில் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். போதனா வைத்தியசாலை இன்று முதல் பருத்தித்துறை மந்திகையில் அமைந்துள்ள ஆதார வைத்திய சாலையில் இயங்கும் என்று யாழ். வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ். நகர்மீது தொடர்ந்து இடம் பெறும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்தே யாழ். ஆஸ்பத்திரி பருத்தித்துறைக்கு இடம் மாற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை —

யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்றும் ஊழியர்களை அவர்கள் தற்போது இடம் பெயர்ந்துள்ள பகுதிகளில் உள்ள அரச வைத்தியசாலைகளில் பணியாற்றுமாறும் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நகரை அண்டிய பகுதிகளில் அகோர ஷெல் வீச்சு!

யாழ். நகரை அண்டிய பகுதிகள் பலவும் நேற்று ஸ்ரீலங்காப் படையினரின் அகோர ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகியிருக்கின்றன.

எனினும் அப்பகுதியிலிருந்து மக்கள் முற்றாக வெளியேறி விட்டிருந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுவிட்டன. எனினும் வீடுகள், மக்களின் உடைமைகள், சொத்துக்கள் பெருமளவில் நாசமானதாகத் தெரிய வந்தது

திருநெல்வேலி, பல்கலைக் கழகச் சந்தி, நல்லூர் கந்தசுவாமி கோவிலை அண்டிய பிரதேசம், யாழ். திருக்குடும்ப கன்னியர் மடப் பகுதி, முத்திரைச்சந்தி மற்றும் கந்தர் மடப் பகுதிகளில் நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் —

இதனால் பல வீடுகளும் அவற்றிலிருந்த பொருள்களும் பலத்த சேதமடைந்ததாகவும் —

யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன (உ-3-9)

## நாவற்குழியில் வீழ்ந்த ஷெல்லுக்கு ஒருவர் பலி!

### எண்மர் படுகாயமுற்றனர்

யாழ்ப்பாணம், நவ. 14

நேற்று நண்பகல் 12. 30 மணியளவில் ஸ்ரீலங்காபபடையினர் ஏவிய ஷெல்கள் நாவற்குழிப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். எண்மர் படுகாயமடைந்தனர்.

நாவற்குழி சந்திப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லுக்கு அச்சமயம் ''லாண்ட்மாஸ்டர்'' வாகனம் ஒன்றைச் செலுத்தி வந்ததாகக் கூறப்படும் — கொக்குவில் மேற்கைச் சேர்ந்த— வைத்திலிங்கம் ஜீவகுமார் (வயது 21) என்பவர் அந்த இடத்திலேயே பலியானார்.

இவர் இடம்பெயர்ந்து மந்துவில் பகுதியில் வசித்து வந்தார்.

இதேசமயம் நாவற்குழி வீடமைப்புத் திட்ட பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் அறுவர் படுகாயமடைந்தனர். அவர்களின் விபரம் வருமாறு:-

★ பஞ்சலிங்கம் பத்மாவதி (வயது- 50)

★ தம்பிராசா செல்வம் (வயது- 39)

★ செல்வராசா சிவயோகதர்சினி (வயது- 03)

★ செல்வராசா சாமினி

(4 ஆம் பார்க்க பார்க்க)

## வடமராட்சி பகுதி மீது நற்றும் கடும் ஷெல் வீச்சு!

### பொலிகண்டியில் சிறுமி பலி!!

வடமராட்சி, நவ. 14

வடமராட்சிப் பகுதி மீது நேற்றும் தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப் பட்டன. இதனால் ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தி உயிரிழந்தார்.

நேற்று முன்தினமிரவும் நேற்று அதிகாலையிலும் விட்டு விட்டு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் பொலிகண்டி பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த சிறுமி ஒருத்தி பலியானார்.

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட சுமார் இருபத்தியைந்து ஷெல்கள் திக்கம், சக்கோட்டை, புலோலி, கருகம்பனை, மயானம், வதிரியில் அமைந்துள்ள வடமராட்சி [illegible] கல்லூரிப் பகுதி போன்ற இடங்களில் வீழ்ந்து வெடித்தன. இதனால் பயன்தரு மரங்கள் பலவும் சேதமடைந்தன.

(உ-173))

## யாழ். பல்கலைக்கழகம் ஷெல்லினால் கடும் சேதம்!

யாழ்ப்பாணம், நவ. 14

கோண்டாவில் பகுதியிலிருந்து ஸ்ரீலங்காப் படையினர் நேற்று ஏவிய ஷெல்கள் யாழ். பல்கலைக்கழக கட்டடங்கள் மீது விழுந்து வெடித்ததால் பல்கலைக்கழக கட்டடங்கள் மற்றும் பொருள்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மருத்துவபீட கட்டடம் உட்பட ஏனைய பீடங்களின் கட்டடங்களும் அங்கிருந்த உபாரணங்களும் பலத்த சேதம் அடைந்ததாகத் தெரிய வந்தது. (உ-3-9)

## யாழ். நகரம் விரைவில் பெரும் போர்களமாகும்

### ஜெனிவாவில் செஞ். அதிகாரி தகவல்

ஜெனிவா, நவ. 14

யாழ். நகரம் விரைவிலேயே பெரும் போர்க்களமாகும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தெற்காசிய பிராந்தியத்துக்கான பிரதிநிதி மார்க்கோ அல்த்தர் ஜெனிவாவில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் இருந்து ஜெனிவா திரும்பியுள்ள அவர் மேலும் தெரிவித்திருப்பதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்புசால் வாசக நேயர்களே!

உங்கள் அபிமானத்தையும், பெருமதிப்பையும் பெற்று விளங்கும் உதயன், போர்க் காலச் சூழ்நிலை காரணமாகக் கடந்த இரண்டுவாரங்களாக வெளிவரவில்லை.

உங்கள் ஆசியுடனும், ஆண்டவன் அருளுடனும் உதயன் மீண்டும் உங்கள் கரங்களில்இன்று தவழ்கிறான்.

குறுகிய கால இடைவெளியில் உதயனை வெளியிடக் கூடியதாக, இந்த நெருக்கடி மிகுந்த காலத்திலும் அல்லும் பகலும் உழைத்த எங்கள் பணியாளர்களையும் மற்றும் பல வகைகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களையும் பாராட்டுகிறோம்.

உங்கள் அன்பையும் ஆதரவையும் வேண்டும் —

-நிர்வாகத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் நிறுவனங்கள் வடக்கே பொருள்களை எடுத்துவரத் தடை!

## நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை

யாழ்ப்பாணம், நவ. 14

குடாநாட்டில் இடம்பெயர்ந்துள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் நிவாரணப் பொருள்களை எடுத்துவர யாழ். மாவட்டத்தில் இயங்கும் தொண்டர் அமைப்புகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மிக அவசரமாகத் தேவைப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்காக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் அமைப்புகள் பல பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தன. ஆனால் பாதுகாப்பு அமைச்சு அதற்கான அனுமதியை வழங்க முற்றாக மறுத்துள்ளது.

இது விடயத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, புனர்வாழ்வு அமைச்சு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றிடமும் மேற்படி தொண்டர் அமைப்புகள் உதவி கோரி விண்ணப்பித்திருந்தன.

பாதுகாப்பு அமைச்சை மீறி இது விடயத்தில் தங்களால் உதவி வழங்க முடியாது என அவை தெரிவித்து விட்டன. இதனால் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை தொண்டர் அமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை—

தாண்டிக்குளம் ஊடாக வடக்கே பொருள்களை எடுத்து வருவதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. கடந்த பல நாள்களாக உணவு லொறிகள் எதுவும் தாண்டிக்குளம் ஊடாக வட பகுதிக்கு வரவில்லை.

மடு அகதி முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு மட்டும் ஒரு தொகுதி உணவுப் பொருள்களை வாகன அணியில் அங்கு எடுத்துச் செல்ல அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்தப் பொருள்களை ஏற்றி வந்த வாகன அணி மட்டுமே தாண்டிக்குளம் ஊடாக கடந்த வெள்ளியன்று வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டது. (ஐ-3)

## கைதடி பகுதி மக்களும் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 14

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கைதடி, நாவற்குழி பகுதிகளில் தங்கியிருந்த மக்கள், அப்பகுதிகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நேற்று நடத்திய ஷெல் தாக்குதல்களை அடுத்து தென்மராட்சியின் ஏனைய பகுதிகளுக்கும் வடமராட்சிக்கும், வன்னிப் பகுதிகளை நோக்கியும் நேற்று இடம்பெயர ஆரம்பித்தனர். [உ-13]

## வடக்கில் படை நடவடிக்கை: கொழும்பில் பதற்ற நிலை

கொழும்பு, நவ. 14

வடபகுதியில் ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொண்டுவரும் பாரிய இராணுவ நடவடிக்கையை அடுத்து கொழும்பிலும் பதற்றம் நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன

வடபகுதியில் படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பதிலடியாக கொழும்பில் விடுதலைப் புலிகளின் கரும்புலிப் பிரிவினர் பல்வேறு தொடர் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தலாம் என கொழும்பு மக்கள் அஞ்சுவதாகவும்—

இதனால் எவ்வேளையும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்தில் பதற்றத்துடன் அவர்கள் வசிப்பதாகவும்—

கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (உ-3)

## ஆனையிறவு படையினரும் ஷெல் வீச்சு!

தென்மராட்சி, நவ 14

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்தும் நேற்று அதிகாலை படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

படையினர் ஏவிய ஷெல்கள் பல தென்மராட்சி பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன. (ஐ)

## பிரபாவைக் கைதுசெய்ய உதவினால் ரூபா 50லட்சம்!

### ஸ்ரீலங்கா அரசு அறிவிப்பு

மணிலா, நவ. 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனைக் கைது செய்வதற்கான துப்பை வழங்குபவருக்கு ஐம்பது லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருக்கின்றது.

இது பற்றிய பொலீஸ் அறிக்கை நேற்றைய கொழும்புப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

துப்புத் தருபவரின் விவரம் இரகசியமாகப் பேணப்படும் என்று பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு தெரிவித்திருக்கின்றார்.

இராஜத் துரோக நடவடிக்கைகளைத்திட்டமிட்டு செயற்படுத்தியமை, ராஜீவ்கொலைச் சம்பவம் ஆகிய குற்றச்சாட்டுகள் புலிகளின் தலைவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன என பொலீஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (உ-6)

## ராணுவத் தலைமையக தாக்குதல்: தற்கொலையாளி பற்றிய தகவலுக்கு ரூபா 10 லட்சம்!

கொழும்பு, நவ. 14

கடந்த சனியன்று கொழும்பில் இராணுவத் தலைமையகத்தின் பிரதான வாசலுக்கு அருகிலும் கொம்பனித் தெரு ரயில் நிலையத்துக்கு அருகிலும் பெரும் குண்டுத் தாக்குதல்களை நடத்திய இரு தற்கொலைத் தாக்குதல் நபர்கள் பற்றிய துப்புக்களை வழங்குவோருக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது.

இளைஞர் ஒருவரும் யுவதி ஒருவருமே இத்தாக்குதல்களை நடத்தினர் என்றும்—

தாக்குதல்களின்போது அவர்களும் உடல் சிதறிப் பலியானார்கள் என்றும் —

பூர்வாங்க விசாரணைகளின் பின் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இத் தாக்குதல்களின்போது 19 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-3]

## ஆஸ்பத்திரியில் மரணமானோரின் சடலங்களை ஏற்கவும் உறவினர்கள் பின்னடிப்பு

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வார்ட்டுகளில் மரணமாகும் பலரின் சடலங்கள் உறவினர்களால் பொறுப்பேற்கப்படாமல் அநாதரவாக விடப்படும் பரிதாபநிலை கடந்த இருவாரங்களாக இடம்பெற்று வருகின்றது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் உயிரிழக்கும் தயது உறவினர்களின் சடலங்களுக்கு இறுதிக்கிரியைகள் செய்வதற்கு இடவசதி இல்லாததால் சடலங்களைப் பொறுப்பேற்கத் தயங்குவதாலும்—

பிள்ளைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவிட்டு இங்கு தங்கியிருந்த வயோதிபர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமாவதாலும் அநாதரவான சடலங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தினமும் ஐந்துக்கு மேற்பட்ட சடலங்கள் அரச செலவில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. (உ-117)

## வெளியூர் தபால்கள் அனுப்பி வைப்பு

தென்மராட்சி, நவ. 14

வெளிமாவட்டங்களுக்கான தபால் பொதிகள் ஹபரண கப்பல் மூலம் அனுப்புவதற்காக நேற்று சாவகச்சேரி தபால் நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டன. (உ-117)

## காய்ச்சல், வயிற்றோட்டம் பரவுகின்றன!

வடமராட்சி, நவ. 14

வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் காய்ச்சல் (இன்புளுவன்சா), வயிற்றோட்டம் ஆகிய நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

இப் பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில் இந்த இரண்டு நோய்களுக்காகவும் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வயிற்றோட்ட நோயினால் அல்வாய் மேற்கைச் சேர்ந்த அன்ரனி ரகுதாஸ்(2½ வயது) என்ற குழந்தையும், காய்ச்சலினால் கொடிகாமத்தைச் சேர்ந்த ஜே. கஜானா (1 வயது) என்ற குழந்தையும் மரணமானார்கள். [அ-173[

## மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளர் வரவு உயர்வு

பருத்தித்துறை (மந்திகை) அரசினர் ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தினமும் ஆயிரத்து 300க்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

நோயாளர் எண்ணிக்கை சுமார் நான்கு மடங்கு அதிகரித்ததை அடுத்து வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவும் விஸ்தரிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர்கள், தாதிகள் உட்பட அனைத்துப் பிரிவு ஊழியர்களில் ஒரு பகுதியினர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணிபுரிவதால் நோயாளர்களின் நெருக்கடியை ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-173)

## போர் தீவிரமடைந்ததால் நிதித்திட்டங்களில் மாற்றம்

### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, நவ. 14

எதிர்பாராத விதமாக வடக்கில் சண்டை தீவிரமடைந்ததால் நிதி மற்றும் பொருளாதாரத் திட்ட இலக்குகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

நீதி அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜீ. எல். பீரிஸ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை முதலீட்டுமாநாடு என்ற பெயரில் கொழும்பில் நடந்த மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றில் நேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்துக்குச் செலவிடப்படும் 3 ஆயிரத்து 200 கோடி ரூபா நிதி தொடர்பாக இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன என்றும் அவர் கூறினார்.

பணவீக்கத்தை குறைந்த மட்டத்தில் வைத்திருக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (உ-ஐ)

## கொழும்பில் பல மடங்கு பாதுகாப்பு

கொழும்பு, நவ. 14

இராணுவத் தலைமையகத்தின் பிரதான வாயிலிலும், ஜனாதிபதி சந்திரிகாவின் வாசஸ்தலத்துக்கு அருகிலும் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களின் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

ஏற்கனவே தலைநகரினுள் ஊடுருவியிருப்பதாகக் கூறப்படும் தற்கொலைப் படையினர் அடுத்த சிலநாள்களில் எவ்வேளையிலும் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)


உதயன்

விற்பனை முகவர்களுக்கு

இடம்பெயர்ந்துள்ள உதயன் பத்திரிகை விற்பனை முகவர்களை எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகாமையாளர்
உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம் புளியடி சந்திக்கருகில்)
சரசாலை,
சாவகச்சேரி.



பத்திரிகை விற்பனையாளர்

துவிச்சக்கரவண்டிகளில் சென்று பத்திரிகை விற்பனை செய்யக்கூடியவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்,
உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு அருகில்)
சரசாலை,
சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அத்தியாவசியம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் பிரிவில் வாழ்ந்த ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தென்மராட்சி, வடமராட்சிப் பிரிவுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

ஏற்கனவே வலிகாமம் வடக்கு, தீவுப்பகுதி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமத்தில் தங்கியிருந்தவர்களும் இவர்களில் அடங்குவர்.

இத்தனை லட்சம் மக்கள், மூன்று நான்கு நாள்களில்—

இரவிலும் பகலிலும், மழையிலும் பனியிலும் வெய்யிலிலுமாக —

நடந்தும் ஓடியும், தவழ்ந்தும் ஊர்ந்தும்—

தமது வீடு வாசல்களை, பெறுமதி மிக்க உடைமைகளை, நில புலங்களை விட்டு விட்டு—

உடுத்த உடையுடன் கையில் அகப்பட்ட ஒரு சில தட்டு முட்டுச் சாமான்களுடன் மட்டும் இடம்பெயர்ந்தது ஏன்?

யாழ்ப்பாண நகரத்துக்குப் படை எடுத்து வந்து, அதனை ஆக்கிரமித்து, அட்டூழியம் புரிவதற்கு முனைந்து நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவத்திடம் இருந்து தூர விலகிவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு தான். இராணுவத்தின் அரக்கப்பிடியில் அகப்படாது உயிர் தப்பி வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்துடன் தான்.

தமிழ் மக்களை இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாக்கி, அவர்களை அடக்கி ஆள்வதற்கு தான் போட்ட திட்டம் தவிடு பொடியாகிவிட்டது; மூலோபாய ரீதியாகப் பெரும் தோல்வி கண்டுவிட்டது என்பதனை உள்ளூர உணர்ந்து அரசு மனம் சுருண்டிருக்கும். தனது இயலாமையைக் கண்டு அதன் இதயம் சுக்குநூறாக வெடித்திருக்கும்.

ஆனால் அந்தத் தோல்வியை, இயலாமையை வெளிக்காட்டாமல் யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவது என்ற அர்த்தமற்ற, பயன் எதுவும் இல்லாத திட்டத்தைத் தொடர்வதில் அரசு முழுமூச்சாக நிற்கிறது.

யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றுவதோடு போரை முடிவுக்குக் கொண்டு வந்து விடலாம்; அங்கு சிவில் நிர்வாகத்தைத் தொடங்கி நிலைபெறச் செய்யலாம் என்று சந்திரிகா மனப்பால் குடிக்கிறார். மாமன் அனுருத்த ரத்வத்தையின் சொற்கேட்டு துள்ளிக் குதிக்கிறார்.

யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவது என்பது போரின் ஆரம்பமே அன்றி முடிவல்ல. அரசியல், இராணுவ ஆய்வாளர்கள் இதனை மிகத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டனர். ஆனால் அரசு விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று காட்டுவதற்காக போர் முனையில் மூர்க்கத்தனம் கொள்கிறது.

தங்களது முன்னேற்றத்தைக் கண்டு தூர விலகி வந்த தமிழ்மக்கள் மீது எறிகணை, குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி அவர்களைக் கொல்வதும் அரசின் ஒரு நோக்கம்.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகள் மீது கடந்த மூன்று நான்கு நாள்களாக இராணுவம் நடத்தும் அகோர எறிகணை வீச்சுக்கள் இதனையே புலப்படுத்துகின்றன.

தமிழர்களை இனப்படுகொலை செய்து அவர்களை அடிமைகளாக வைத்திருப்பதற்கான அரசின் பயங்கரவாதத்துக்குச் சாவு மணி அடிப்பதற்குத் தமிழர் படை திரண்டு எழ வேண்டிய அத்தியாவசியத்தை, அவசரத்தை இது உணர்த்துகிறது.

# தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பை திடீரென ஒத்திவைத்தார் சந்திரிகா!

## இன்று இடம்பெறவிருந்தது

கொழும்பு, நவ. 14
கொழும்பில் இருந்து இயங்கும் ஒன்பது தமிழ்க்கட்சிகளை இன்று சந்தித்துப் பேசவிருந்த ஜனாதிபதி அச்சந்திப்பை திடீரென ஒத்திவைத்திருக்கின்றார்.

இச்சந்திப்பு திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது என்று தமிழ்க் கட்சிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு யுத்தத்தை உடன் நிறுத்துமாறு கோரவும்—

வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள பல லட்சம் மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வற்புறுத்தவும்—

இன்றைய சந்திப்பை பயன்படுத்துவதற்கு ஒன்பது தமிழ்க் கட்சிகள் திட்டமிட்டிருந்தன.

ஆனால் திகதி குறிப்பிடாது இச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நோயாளர் படையெடுப்பு!

### சிகிச்சைபெற நீண்ட கியூவில் மக்கள்

தென்மராட்சி, நவ. 14
சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர் எண்ணிக்கை நாளாந்தம் பெருகி வருகிறது.

இதனால் அங்கு பெரும் இட நெருக்கடியும், மருந்துத் தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கிறது.

அங்கு நான்கு பிரிவுகளாக பத்துக்கு மேற்பட்ட டாக்டர்கள் சேவையாற்றி வருகின்றனர். ஒவ்வொரு பிரிவின் முன்பாகவும் நீண்ட கியூவில் நோயாளர்கள் காத்து நிற்கின்றனர்.

இடம்பெயர்ந்து வந்துள்ள லட்சக்கணக்கான மக்கள் பல்வேறு நோய்களாலும் பீடிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் தினமும் அங்கு சிகிச்சைக்குச் செல்கின்றனர்.

வெளிநோயாளர் பிரிவில் மட்டும் நாளாந்தம் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெறுகின்றனர்.

[ஐ 117]

## ஹபரணவில் வந்த மா பாண் தயாரிக்க மட்டுமே

ஹபரண கப்பலில் வந்துள்ள மா முழுவதும் பாண் தயாரிப்பதற்கு மட்டுமே வழங்கப்படும் என யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பாணுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதை இதன் மூலம் ஓரளவுக்கேனும் தவிர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனியன்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த இக் கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் மா எடுத்துவரப்பட்டுள்ளது. (ஐ-3)

## கிணறுகளுக்கு குளோரின் இடுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, நவ. 14
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள நலனோம்பு நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் உள்ள கிணறுகளுக்கு தினமும் குளோரின் இடப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி நகரசபையினர் இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் உள்ள வீடுகள் அனைத்திலும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதால் கிணறுகளுக்கு குளோரின் இடுமாறு குடியிருப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குளோரின் தேவைப்படுவோர் சாவகச்சேரி நகரப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## இடம்பெயர்ந்தோருக்கு ஒரு வார கால நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ. 14
தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு ஒரு வார காலத்துக்கான நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

கிராம சேவையாளரின் சிபார்சுப் பத்திரத்துடன் மக்கள் ப.நோ.கூ. சங்கங்களில் நிவாரணத்தை பெறலாம் என தெரிவிக்கப்பட்டது.

அரிசி, சீனி, பருப்பு, பால் மா வகைகள் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொருள்களை பெற மக்கள் ப.நோ.கூ. சங்கங்கள் முன் கூடி நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

(உ 3)

## பிரதேச செயலர்களை மக்கள் சந்திக்க ஏற்பாடு

தென்மராட்சி, நவ. 14
வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது பகுதி பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்களை வாரந்தோறும் பின்வரும் தினங்களில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ திங்கட்கிழமை — நல்லூர், ஊர்காவற்துறை, வேலணை பிரதேச செயலக பிரிவுகள்.

★ செவ்வாய்க்கிழமை — உடுவில், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுகள்.

★ வியாழன் — [illegible]ணம் பிரதேச செயலக பிரிவு

★ வெள்ளி — தெல்லிப்பளை, சங்கானை பிரதேச செயலக பிரிவுகள்.

(ஐ-117)

## நலன்புரி சங்கம் நோயாளருக்கு உதவி

தென்மராட்சி, நவ. 14
வன்னிப்பகுதிக்கு சிகிச்சைக்காகச் செல்ல விரும்பும் கடும் நோயாளர்களை கிளாலிக்கு ஏற்றிச் செல்ல குறைந்த கட்டணத்தில் வாகன வசதிகளை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் ஏற்பாடு செய்து [illegible] பட்டுள்ளது. (ஐ-117)

## சரசாலையில் சிகிச்சை நிலையம்

தென்மராட்சி, நவ. 14
இடம் பெயர்ந்த மக்களின் நலன்கருதி சரசாலை கிராம சபை கட்டடத்தில் அரச வைத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஓர் அரச வைத்திய நிலையம் எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நோயாளர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருவதால் இடம் பெயர்ந்துள்ள சுகாதாரத் திணைக்கள டாக்டர்கள், ஊழியர்கள் அங்கு அழைக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ-117)

## இரத்தம் கோரி அவசர வேண்டுகோள்

தென்மராட்சி, நவ. 14
சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு இரத்தம் வழங்குவதற்கு இரத்த வங்கியில் கையிருப்பு அடிக்கடி முடிவடைந்து போவதால் பொதுமக்கள் இரத்தம் வழங்கி உதவுமாறு நோயாளர் நலன்புரிச்சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இரத்தம் வழங்க முன்வருவோர் சாவகச்சேரி வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ-117)

## தபால் பகுதி ஊழியர்களுக்கு

தென்மராட்சி நவ. 14
வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள அஞ்சல் திணைக்கள ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி அஞ்சல் நிலையத்தில் நடைபெறுமென வடமாகாண பிரதி அஞ்சல் நாயகம் திரு. சு.மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## தொண்டு நிறுவனங்களின் 3 பிரதிநிகள் யாழ் வருகை

யாழ்ப்பாணம், நவ. 14
சர்வதேச தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

பிரெஞ்சு மருத்துவக் குழு, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், கெயர் நிறுவனம் ஆகியவற்றைச்சேர்ந்த இந்த மூன்று பிரதிநிதிகளும் ஹபரண கப்பல் மூலம் இங்கு வந்துள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலைமை குறித்து இங்குள்ள தங்கள் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் இவர்கள் கூடி ஆராயவுள்ளனர்

(ஐ 3)

## யாழ். தபாலகம் சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம், நவ. 14
யாழ். பிரதம தபாலகம் நாளை புதன்கிழமை முதல் சாவகச்சேரி தபாலகத்தில் இயங்கவுள்ளது.

முத்திரை விற்பனை உட்பட சகல அஞ்சல் பணிகளும் அங்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஐ-3)

## பளைப் பகுயிதில் 6 நலனோம்பு நிலையங்கள்

தென்மராட்சி, நவ. 14
வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பளைப் பகுதிக்கு வந்துள்ள மக்களைத் தங்கவைப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினர் பளை நகரபகுதியில் ஆறு நலனோம்பு நிலையங்களை அமைத்து வருகின்றனர்.

ஒவ்வொன்றும் தலா நூறு அடி நீளத்தில் கொட்டில்களாக அமைக்கப்பட்டு வரும் இந்நிலையங்களில் தற்போது இப்பகுதியில் உள்ள பொது இடங்கள், ஆலயங்களில் தங்கியுள்ள மக்கள் தங்கவைக்கப்படவுள்ளனர். (ஐ-117)

## இடம்பெயர்ந்து இருப்பிடமின்றி

## மழையில் அலைந்தவர் உடல் விறைத்து மரணம்

இராணுவத்தின் தாக்குதல்கள் காரணமாக வலிகாமத்தில் இருந்து தென்மராட்சி பகுதிக்கு இடம்பெயர்ந்து இருப்பிடம் இன்றி அலைந்து திரியும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

எவ்வித உதவியும் இன்றி குடும்பத்தவர்களைப் பிரிந்து தனித்து விடுபட்டுள்ள பலரது சோகக் கதைகள் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன.

கொட்டும் மழையில் சில தினங்கள் அலைந்து திரிந்து தனித்து அவலப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் இறுதியில் உடல் விறைத்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன் இடம் பெற்றது.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து முகமாலைப் பகுதிவரை அலைந்து திரிந்து இறுதியில் முகமாலை மீன் சந்தையில் மழையில் நனைந்து உடல் விறைத்த நிலையில் தங்கியிருந்த இவர் மறுநாள் காலையில் விறைத்துப்போன சடலமாக அங்கு காணப்பட்டார்.

இவரது சடலம் பின்னர் அப்பகுதி மக்களின் உதவியுடன் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் வீதியைச்சேர்ந்த மரியதாஸ் (வயது 40) என்ற தச்சுத் தொழிலாளி எனத் தெரிய வந்தது.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்கு செல்வது நல்லது எனப் புலிகள் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ 14

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் வன்னிப் பகுதிக்குச் செல்வது நல்லது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்

பெருமளவிலான இடம்பெயர்வினால் இரண்டு பகுதிகளிலும் இடநெருக்கடி உண்டாகியுள்ளது. இதனால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து உண்டு.

இத்தகைய நெருக்கடிகளை தவிர்க்கவும் —

யாழ்ப்பாண நகரை ஆக்கிரமிக்கும் முயற்சியில் இராணுவத்தினர் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு ஷெல்களை ஏவக்கூடும் என்பதால், அவற்றால் உண்டாகக்கூடிய உயிரிழப்புகளைக் குறைக்கவும் —

மக்கள் இயன்றளவு வன்னிப் பிரதேசத்துக்கு இடம்பெயர்வது உகந்தது — என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் ஆலோசனை கூறியுள்ளனர்.

வன்னிக்குச் செல்ல விரும்பும் மக்களுக்குத் தேவையான இலவச பிரயாண வசதிகளையும் மற்றும் தங்குமிட, உணவு, மருத்துவ வசதிகளையும் விடுதலைப் புலிகள் செய்து கொடுத்து வருகின்றனர்.

இதுவரை ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது. (அ-3)

# ம.எண்ணெய், மாவுடன் "மாஹோ" இன்று வரும்

யாழ்ப்பாணம், நவ. 14

மண்எண்ணெய், மற்றும் மாவுடன் ''மாஹோ'' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

3 ஆயிரம் பரல் மண்எண்ணெய்யை கொழும்பில் ஏற்றிக்கொண்டு திருகோணமலைக்கு வந்துசேர்ந்த இக்கப்பலில், ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றும் பணி நேற்று அங்கு இடம்பெற்றதாகவும் —

நேற்று மாலை அங்கிருந்து புறப்படும் இக்கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் —

நேற்றுக்காலையில் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் ஓய்வூதியர்களுக்கான நவம்பர்மாத வவுச்சர்களும் எடுத்துவர ஏற்பாடாகியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# 6 எண்ணெய் தாங்கிகளுடன் ரயில் தடம் புரண்டது!

## மீரிகம அருகில் சம்பவம்

கொழும்பு, நவ. 14

மீரிகமவுக்கு சமீபமாக வில்வத்த ரயில் நிலையத்தில் ஆறு எண்ணெய்த் தாங்கிகளுடன் சென்று கொண்டிருந்த ரயில் ஒன்று தடம் புரண்டது.

இதனால் அப்பகுதியூடான இருவழி ரயில் போக்குவரத்து ஒரு பாதையில் மட்டுமே தற்போது நடைபெற்று வருகின்றது.

நேற்று ரயில் தடம் புரள்வதற்குச் சற்று முன்னர் —

நேற்றுக் காலை 5-45 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி ரயில் மீரிகமவில் திடீரென நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதற்கென கொழும்பில் இருந்து குண்டை செயலிழக்கச் செய்யும் குழு ஒன்று மீரிகமவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றும் —

ஆயினும் பார்சல் ஒன்றை மட்டுமே அவர்களால் கண்டு பிடிக்க முடிந்தது என்றும் ஸ்ரீலங்கா வானொலி அறிவித்தது.

அந்தப் பார்சலில் சிறிய மோட்டார் ஒன்றும், சிறிய பற்றரிகளும் கம்பிகளும் இருந்ததாகவும் மீரிகம பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# யாழ். செயலகம் சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். செயலகத்தின் முக்கிய பிரிவுகள் நேற்று முதல் சாவகச்சேரியில் இயங்க ஆரம்பித்தன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் யாழ். செயலகத்தின் ஓய்வூதியக் கிளை, கணக்குக் கிளை, நிர்வாகக் கிளை ஆகியன நேற்று இயங்க ஆரம்பித்தன.

செயலக புனர் வாழ்வுப் பிரிவு ஏற்கனவே சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்குவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## உதயன் செய்தியாளர்களுக்கு

இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் வதியும் உதயன் பிரதேசச் செய்தியாளர்கள் அனைவரையும் உதயன் பணிமனைக்கு நாளை காலை 10 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரதம ஆசிரியர்,
**உதயன் பணிமனை,**
**பருத்தித்துறை வீதி,**
**(கனகம்புளியடிச் சந்திக்கு சமீபமாக)**
**சரசாலை தெற்கு.**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 14-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். போதனா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மருந்து வகைகளும், முக்கிய உபகரணங்களும் நேற்று மந்திகை ஆஸ்பத்திரிக்கும் பதுகாப்பான வேறு இடங்களுக்கும் அனுப்பப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியில் தங்கியுள்ள டாக்டர்களும் இன்று காலை அங்கிருந்து வெளியேறி பருத்தித்துறைக்கு செல்லவுள்ளனர். (ஐ-3)

### தமிழ்க்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லகம் அறிவித்திருப்பது தமிழ்க் கட்சிகளுக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பிலிருந்து இயங்கும் பத்து தமிழ்க் கட்சிகளில் ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி மட்டும் இச்சந்திப்பில் பங்கு பற்றுவதில்லை என முன்னர் தீர்மானித்திருந்தது குறிப்பிடத்தக்கது. [உ-ஐ 6]

### யாழ். நகரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது:-

யாழ். நகருக்கு வெளியே ஏராளமான அரச படையினர் போருக்கு ஆயத்தமான நிலையில் நிற்கின்றனர்.

சிறுசிறு சண்டைகள் தொடர்ந்து நடந்த போதும் நகரத்தைக் கைப்பற்றுவதற்கான நேரடித் தாக்குதல்கள் இன்னமும் ஆரம்பமாகவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து மேலும் 50 ஆயிரம் மக்கள் கடந்த சனி ஞாயிறு தினங்களில் வெளியேறியுள்ளனர்.

யாழ். நகரம் விரைவிலேயே பெரும் போர்க்களமாக மாறும் எனக் கருதுகிறேன் — என்று தெரிவித்தார். (ஐ)

### நாவற் குழியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது- 20)

★ குண்டுமணி கிருபாகரன் (வயது- 13)

★ ஜேம்ஸ் ஜோசெப் (52 வயது) — ஈச்சமோட்டை

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் தங்கியிருந்தவர்களாவர். காயமுற்ற இந்த அறுவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை இச்சம்பவத்தில் காயமுற்ற சாந்தி என்ற குடும்பப் பெண்ணும் அவரது பிள்ளைகளும் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3 13)

### இருபாலை,...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை நடத்தியவாறு பெருத்த எடுப்பில் முன்னேற முயன்ற படையினரை வழிமறித்துத் தீரத்துடன் புலிகள் போரிட்டு வருவதாகத் தெரியவந்தது.

புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதமடைந்த படையினரின் ரி.56 ரக டாங்கி ஒன்று எரிந்து கொண்டிருப்பதாகவும் யுத்த முனைச் செய்திகள் தெரிவித்தன.

படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்றைய முன்னேற்ற முயற்சியிலும் ஆயிரக்கணக்கான துருப்புக்களும் இராணுவ டாங்கிகளும் கவச வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டன.

படையினரின் அகோர ஷெல் தாக்குதல்களுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்திவரும் எதிர்த் தாக்குதல்கள் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டுள்ள [illegible] யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஐ-3-9)

# தமிழ் மதகுருமார் அறுவர் கண்டி மாநாட்டில் கைது!

## தடுத்து வைக்கப்பட்டபின் விடுதலை

கொழும்பு, நவ. 14

கண்டி நகரில் நடந்து கொண்டிருக்கும்கத்தோலிக்க மதகுருமாரின் மாநாட்டுமண்டபத்துக்குள் நேற்று முன்தினம் திடீரெனப்பிரவேசித்த பொலீஸார் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த ஆறு தமிழ் ''ஜேசுவிற்'' மதகுருமார்களைக் கைதுசெய்தனர்.

இவர்கள் ஆறு பேரும் கண்டி பொலீஸ் நிலையத்தில் 24 மணித்தியாலங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்தவாரம் ஆரம்பமான இந்த கத்தோலிக்க மாநாட்டில் அமெரிக்கா, இத்தாலி, பாகிஸ்தான், இலங்கை உட்பட பல நாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுருமார்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து சென்ற இளம் மதகுருமார்களும் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே ஆறு தமிழ் மதகுருமார்களும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஐ)

# யாழ். நகர வங்கிகளின் ஆவணங்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். நகரில் இயங்கிய அரச, தனியார் வங்கிகளின் முக்கிய ஆவணங்கள் நேற்று அங்கிருந்து எடுத்து வரப்பட்டன.

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி என்பனவற்றின் முக்கிய ஆவணங்களே அந்தந்த வங்கிகளின் அதிகாரிகளால நேற்று தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

வங்கிகள் எங்கு இயங்கும் என்பது குறித்த தகவல்களை அந்த வங்கிகளின் அதிகாரிகள் இன்னமும் வெளியிடவில்லை. (ஐ-3)

# வடக்கில் அரசு நடத்துவது பெரும் இனப்போரே

## ஜே. வி. பி. செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 14

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தற்போது அரசு மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை மக்களை விடுவிப்பதற்கான போர் அல்ல: அது ஒரு பெரும் இனப்போர் ஆகும்.

—ஜே. வி. பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி. இயக்கத்தின் தலைவர் றோஹண விஜேவீர கொல்லப்பட்ட ஆறாவது ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்து ஜே.வி. பியினர் நேற்று கொழும்பில் பேரணி நடத்தினர்.

பேரணியின் முடிவில் கருத்து வெளியிட்ட பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நடக்கும் போர் மக்களின் வாழ்வுடன் விளையாடும் கொடூர யுத்தமாகும் இது நாட்டில் உள்ள ஆதிக்கவாதிகளினது நலன்களையும் திருப்திப்படுத்துவதற்காக நடத்தப்படும் போர் ஆகும் — என்றார். (ஐ-6)

# தென்மராட்சி பகுதியில் 265 முகாம்கள் அமைப்பு

தென்மராட்சி நவ. 14

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிக்கு வந்துள்ளவர்களில் 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தென்மராட்சி பச்சிலைப்பள்ளிப் பகுதிகளின் அமைக்கப்பட்டுள்ள 265 நலனோம்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் 242 நலனோம்பு நிலையங்களும், பச்சிலைப்பள்ளிப் பகுதியில் 23 நலனோம்பு நிலையங்களும் செயற்பட்டு வருகின்றன.

நலனோம்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் சுமார் நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தங்கியுள்ளதாக பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. (ஐ-117)

## மரண அறிவித்தல்

### திருமதி நடேசன் அன்னமுத்து

[ஆசிரியை]

பொலிகண்டியை வசிப்பிடமாகக் கொண்ட அன்னமுத்து அவர்கள் 13-11-95 அன்று காலமானார்.

இவர் நடேசனின் (இளைப்பாறிய உயர் நீதிமன்ற எழுதுவினைஞர்) அன்பு மனைவியும், குலசேகரம் (சிவில் அத்தியட்சகர்), குலஞானவதி, குலஞானமணி குலஞானநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமலாதேவி, தேவராஜா (டுபாய்) அருளானந்தம் (இலங்கை தூதரகம் ஜெனிவா), தியாகராஜா (களஞ்சியக் காப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14 – 11 – 95) இன்று பொலிகண்டியில் பகல் 10.00 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. குலசேகரம்
(மகன்)

அ. மி. த. க பாடசாலை,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(39195)